தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.02.2024

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சாஸ்திரி இந்தியா மற்றும் கனடா நிறுவனங்களின் இரண்டு நாள் கருத்தரங்கு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சாஸ்திரி இந்தியா மற்றும் கனடா நிறுவனங்களின் இருதரப்பு தேசிய வேளாண் குழுக்களின் இரண்டு நாள் கருத்தரங்கு 22.02.2024 முதல் 23.02.2024 வரை நடைபெற்று வருகிறது. 22.02.2024 அன்று நடைபெற்ற துவக்கவிழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள் அனைவரையும் வரவேற்று துவக்கவுரையாற்றினார்கள். துணைவேந்தர் அவர்கள் பேசுகையில், இந்திய கனடா நாடுகளிடையே வேளாண்மை, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்துறை ஈடுபாட்டிற்கான விரிவான இணைப்பை ஏற்படுத்த இந்த கருத்தரங்கு வாய்ப்புகளை உருவாக்கும் என தெரிவித்தார். மேலும், இரு தரப்பிலும் துல்லிய வேளாண்மை, உணவுப் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல், கழிவு மேலாண்மை, மண் மற்றும் தாவர ஆரோக்கியம், தொழில்நுட்ப மேம்பாடு, தொழில்நுட்ப பரிமாற்றம், வேளாண்மை, கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் ஆகிய கருத்துக்களில் ஆராய்ச்சிகள் அமைய முயற்சி மேற்கொள்ளப்படும் எனவும் கூறினார்.

கனடா நாட்டிற்கான இந்திய உயர் ஆணையர் திரு.சஞ்சய் குமார் வர்மா அவர்கள் பேசுகையில், பெரிய அளவிலான உணவு இழப்புகளை தவிர்க்கவும் நாட்டின் வேளாண் வளர்ச்சியை மேம்படுத்தவும் புதுமையான தொழில்நுட்பங்கள் தேவைப்படுகின்றன. எனவே அதற்கான ஆராய்ச்சிகள் இருதரப்பிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இவ்விழாவில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் துணை இயக்குநர் (கல்வி) முனைவர் ஆர்.சி.அக்ரவால் அவர்கள் விழாவினை துவக்கி வைத்து தலைமையுரையாற்றினார்கள். அவர் பேசுகையில், வளர்ந்து வரும் உணவுத் தேவை மற்றும் ஊட்டச்சத்து தேவைகளை சந்திக்க டிஜிட்டல் வேளாண்மை, காலநிலை மாற்றங்கள், உணவுப் பதப்படுத்துதல் மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கூறினார்.

ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் வேளாண் பேராசிரியர்கள் இருதரப்பு ஆராய்ச்சிகள் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். கல்ப் பல்கலைக்கழகத்தில் செயலாளர் மற்றும் துணைவேந்தர் மற்றும் கனடா நாட்டின் பிரதிநிதி முனைவர் சர்லோட்டி யேட்ஸ் அவர்கள் காலநிலை மாற்றம், உணவு தரம் மற்றும் உணவு பாதுகாப்பு குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். கனடா டல்ஹவுசி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு துணைச் செயலாளர் முனைவர் ஆலிஸ் ஐக்கின் அவர்கள் பேசுகையில், வேளாண் கழிவு மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

முனைவர் பவ்னேஷ் மதன், செயலாளர், இந்திய கனடா நிறுவனங்கள் அவர்கள் இருநாடுகளுக்கும் அடிப்படையிலான ஆராய்ச்சி உறவுகள் வலுப்பெற வேண்டும் எனவும் புதிய வேளாண் வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். இவ்விழாவில் 70 க்கும் மேற்பட்ட இந்திய மற்றும் கனடா நாட்டைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பங்கு பெற்றனர்.

இறுதியாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் நல மையத்தின் முதன்மையர் மற்றும் இவ்விழாவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் என்.மரகதம் அவர்கள் கலந்து கொண்டு நன்றியுரையாற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்